# பதவி வெற்றிடங்கள்

## ஒன்றிணைக்கப்பட்ட நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம் (IWWRMP)

IWWRMP

# நீர்ப்பாசன அமைச்சு

ஒன்றிணைக்கப்பட்ட நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டமானது (IWWRMP) 2026 ஒக்டோபர் 31ஆம் திகதி நிறைவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ள, நீர்ப்பாசன அமைச்சின் கீழ் உள்ள உலக வங்கியினால் நிதியிடப்பட்ட திட்டமாகும்.

அரசாங்க ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் 2019-03-15ஆம் திகதிய 01/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றுநிருபத்தின் (MSD) பிரகாரம் ''ஒப்பந்த அடிப்படையில்'' முழு நேர வேலைக்கு பின்வரும் செயற்றிட்ட முகாமைத்துவ பணியாட்தொகுதியின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக தகுதி வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்கூறப்பட்ட 2019/01ஆம் இலக்க முகாமைத்துவச் சுற்றுநிருபத்தின் 03ஆம் அட்டவணையிலுள்ள 03ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் 62 வயதிற்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும். ஆங்கிலத்தில் தேர்ச்சியுடன் அரசாங்க ஒழுங்குமுறைகளில் பரீட்சயம் மற்றும் கணினி அறிவு அவசியமாகும். இயைபுடைய துறையில் இலங்கையில் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு நிதியிலான திட்டங்களில் உள்ள வேலை அனுபவம் மேலதிக அனுகூலமாக அமையும்.

| இல. | PS வகுதி | பதவி | வெற்றிட எண்ணிக்கை | ஏற்புடைய சுற்றுநிருபம் |
|---|---|---|---|---|
| 01 | PS 4A | பொறியியலாளர் (பெறுகை மற்றும் ஒப்பந்தங்களில் உள்ள அனுபவம் விரும்பத்தக்கது) | 2 | 2019/01ஆம் இலக்க MSD சுற்றுநிருபம் |
| 02 | PS 4B | பொறியியலாளர் (பெறுகை மற்றும் ஒப்பந்தங்களில் உள்ள அனுபவம் விரும்பத்தக்கது) | 3 | |
| 03 | PS 5 | கணக்கியல் அதிகாரி | 1 | |
| 04 | PS 5 | நீரியல் வானிலை தொழில்நுட்பவியலாளர் (IT/ மின்சாரம்/இலத்திரனியலில் உள்ள அனுபவம் விரும்பத்தக்கது) | 1 | |
| 05 | PS 6A | செயற்றிட்ட அதிகாரி / அபிவிருத்தி அதிகாரி | | |
| 06 | | முகாமைத்துவ உதவியாளர் | 2 | 06-2006 அரச சேவை ஆணைக்குழு |
| 07 | | சாரதிகள் (கனரக வாகனம் செலுத்தும் உரிமம் மற்றும் 3 வருட கால அனுபவம் சகிதம்) | 4 | |

சுய விபரங்கள் சகிதம் உறவினரல்லாத நடுவர்கள் இருவரின் விபரங்கள் மற்றும் அடிப்படை தகைமைகள் அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடனான விண்ணப்பங்களை 2024 ஜுலை 11ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். அரசாங்க சேவை / மாகாண அரச சேவை உட்பட உள்ளூராட்சி நிறுவனங்கள் / அரச கூட்டுத்தாபனங்கள் / நியதிகள் சபைகள் மற்றும் முழுமையான அரசுரிமை நிறுவனங்களில் உள்ள விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை திணைக்களத்தின் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

மேலும், இதே விண்ணப்பத்தை ao.iwwrmp@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு விடயத் தலைப்பில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு அனுப்புமாறு விண்ணப்பதாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**பதில் செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**ஒன்றிணைக்கப்பட்ட நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம் (IWWRMP)**
**2ஆம் மாடி, மகாவலி நிலையம்,**
**இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,**
**கொழும்பு 07.**
**தொலைபேசி : 011 2691163**
**இணையதளம் : www.iwwrmp.lk**

குறும்பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படுவர். ஆதரவு தேடுதல் தகுதியீனமாகக் கருதப்படும் என்பதுடன் அத்தகைய விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**செயலாளர்,**
**நீர்ப்பாசன அமைச்சு**
**2024-07-04ஆம் திகதி.**